# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 29 செவ்வாய்க்கிழமை 11.06.2024 கதிர் 226



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

Yarl Muttram

Youtube Channel




# சூடுபிடிக்கும் அரசியல் களம் தமிழரசு - அநுர குழு சந்திப்பு

## ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஆராய்வு



தேசிய மக்கள் சக்தியினருக்கும் தமிழரசுக் கட்சியினருக்கும் இடையில் விசேட சந்திப்பு இன்று நடைபெற்றது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி குழுவினர், மாவை சேனாதிராஜா தலைமையிலான தமிழரசுக் கட்சியினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ். மார்டின் வீதியிலுள்ள தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று காலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது பிரதானமாக ஜனாதிபதித் தேர்தல் உட்பட சமகால அரசியல் நிலைமைகள் எனப் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இந்தச் சந்திப்பில் தமிழரசுக் கட்சி சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராஜா, சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், நிர்வாகச் செயலாளர் எஸ்.எக்ஸ். குலநாயகம், ஊடகப் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

2➤

## சஜித் பிரேமதாசவின் பெயரில் உலா வருகின்ற போலிக் கடிதம் குறித்து பொலிஸில் முறைப்பாடு



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் பெயரிலான கடிதத் தலைப்பில் போலியான கையொப்பம் இடப்பட்டு, தொலைக்காட்சி விவாதத்தில் தாம் பங்கேற்கவுள்ளதாக இரண்டு போலிக் கடிதங்கள் பரப்பப்பட்டமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகள் சங்கம் இரகசியப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளது.

முறைப்பாட்டின் பின்னர், ஐக்கிய மக்கள் சக்தி சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதி சட்டச் செயலாளர் புத்தீன் சிறிவர்தன ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், “இந்நாட்களில் எங்கள் தலைவரின் போலிக் கையெழுத்து, போலி முத்திரை, போலியான கடிதத் தலைப்புடன் ஒரு கடிதம் இணையத்தில் உலா வருகிறது. ‘ஜரிஎன்’ தொலைக்காட்சி சேவையில் விவாதத்திற்கு வருவதை எங்கள் தலைவர் ஏற்றுக் கொள்கிறார் என அந்த போலிக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அப்படி

2➤

## சட்டவிரோதமான ஒப்பனை சிகிச்சைகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் பாரிய சுகாதார பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளன

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை



சட்டவிரோதமான மற்றும் தீங்கு விளைவிக்கும் ஒப்பனை சிகிச்சைகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி சமூகமயப்படுத்தப்படுவதனால் பாரிய பொது சுகாதார பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் பயன்படுத்தப்படும் அழகுசாதனப் பொருட்களின் இரசாயன கலவை மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றைச் சோதிப்பதற்கு தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிடம் போதிய ஆய்வுகூட வசதிகள் இல்லை, இது பிரச்சினையை மேலும் மோசமாக்கியுள்ளது எனவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், ஆய்வுகூட வசதிகளை வழங்குவதுடன்,

2➤

# பொலிஸாரின் தொழில்சார் நன்மதிப்பினை பாதுகாக்கும் ஆட்சியை நிலைநாட்டுவோம்!

## தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க உறுதி





பொலிஸாரின் தொழில்சார் நன்மதிப்பினைப் பாதுகாக்கும் ஆட்சியை தாங்கள் நிலை நாட்டுவோம் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க உறுதியளித்துள்ளார்.

இளைப்பாறிய பொலிஸாருடைய கூட்டமைவின் தேசிய மாநாடு நேற்று முன்தினம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அநுர குமார திசாநாயக்க அங்கு உரையாற்றுகையில்,

இதற்கு முன்னர் நாங்களும்

4➤

# சம்பள முரண்பாட்டைத் தீர்க்குமாறு கோரி அதிபர்கள், ஆசிரியர்கள் நாளை போராட்டம்

சம்பள முரண்பாட்டைத் தீர்க்க வேண்டும் என வலியுறுத்தி நாளை புதன்கிழமை சகல அதிபர்களும், ஆசிரியர்களும் போராடத் தயாராகுங்கள் என ஒன்றிணைந்த அதிபர், ஆசிரியர் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஒன்றிணைந்த அதிபர், ஆசிரியர் கூட்டமைப்பினர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போதைய அரசுக்கு எமது பலத்தைக் காட்டுவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சம்பள நிலுவை தீர்க்கப்படாமல் உள்ளதால் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

சம்பள நிலுவை தொடர்பில் அரசுடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேச்சு நடத்தியபோதும் இதுவரை தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படவில்லை.

கடந்த வருடங்கள் ஆசிரியர்களின் சம்பள நிலுவை கோரி கொழும்பு உள்ளிட்ட பல இடங்களில் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் சில கோரிக்கைகளை மட்டும் அரசு நிறைவேற்றியது. ஆனால், அதிபர்கள், ஆசிரியர்களின் ஏனைய நிலுவைகள் மற்றும் நிர்வாகப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளமையால் அவற்றைத் தீர்க்கும் முகமாக அரசுக்கு அழுத்தம் வழங்குவதற்காகப் போராட்டத்தை ஒழுங்கு செய்துள்ளோம்.

தொடர்ந்து நாங்கள் ஏமாறுவதற்குத் தயாரில்லை என்பதை அரசுக்கு எடுத்துக்கூற வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் அடுத்து வரும் மாதங்களில் நாடு பூராகவும் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து அரசுக்குப் பாடம் புகட்டப்படும் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்" - என்றனர்.

நாளை மாவட்டங்கள் தோறும் அதிபர்கள், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து போராட்டங்கள் மற்றும் பேரணிகளை முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (05)

# பச்சிலைப்பள்ளியில் மக்கள் போராட்டம்!



கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இந்திராபுரம் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதியின் குறுக்கே அமைந்துள்ள ரயில் பாதையில் பாதுகாப்பான கடவையில்லாததால் நீண்ட நாட்களாகப் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்து வரும் அப்பகுதி மக்கள் இன்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இது தொடர்பில் மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

"இதுவரையில் நிரந்தர பாதுகாப்பான ரயில் பாதை எமக்கு அமைத்துத் தரப்படவில்லை. இது தொடர்பாக பல இடங்களில் தெரிவித்திருந்தும் இதுவரையில் எந்தவொரு முடிவுகளும் எட்டப்படவில்லை. இப்பாதை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதனால் பாடசாலை மாணவர்கள் உட்பட கிராம மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்." - என்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் கூறுகையில்,

"தொழில் நிமித்தமாகவும், அன்றாட தேவைகளுக்காகவும் தினமும் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்தப் பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கடந்து செல்ல வேண்டியுள்ளது. இதே ரயில் கடவையில் கடந்த சில வருடங்களுக்கு முன் 16 மாடுகள் ரயிலுடன் மோதுண்டு உயிரிழந்த சம்பவங்களும் உண்டு." - என்றனர்.

போராட்டத்தைத் தொடர்ந்து கிராம மக்களால் பிரதேச செயலரிடம் இது தொடர்பில் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. தற்போதுள்ள தற்காலிக ரயில் பாதையானது 2012 இல் கன்னிவெடி அகற்றும் பிரிவால் அமைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# நயினாதீவில் அங்கஜனுடன் வழிபாடுகளில் ஈடுபட்ட சஜித்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயிலுக்கு இன்று விஜயம் செய்து விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர் திருமதி உமாச்சந்திர பிரகாஷ் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

## சட்டவிரோதமான ஒப்பனை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆய்வுகூடங்களை பயன்படுத்தி குறுகிய காலத்தில் இந்த ஒப்பனை பூச்சுகளை பரிசோதிக்கும் வகையில் சுகாதார அமைச்சு கவனம் செலுத்த வேண்டும் என சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித்த அலுத்கே தெரிவித்துள்ளார். (ரென-27)

## சஜித் பிரேமதாசவின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கடிதம் இதுவரை நமது தரப்பிலிருந்து வெளியிடப்படவில்லை. போலிக் கடிதம் குறித்து உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் என ரகசிய பொலிஸாரிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது" என்றார். (ரென-26)

## சூடுபிடிக்கும் அரசியல் களம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய மக்கள் சக்தி சார்பில் அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பிமல் ரத்நாயக்கா, இராமலிங்கம் சந்திரசேகர் உட்படப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி குழுவினர் நேற்று தமிழரசுக் கட்சியினரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்த நிலையில் இன்று தேசிய மக்கள் சக்தியினரும் தமிழரசுக் கட்சியினரைச் சந்தித்துள்ளமை அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (05)

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசாமை – வாக்குறுதி கொடுக்காமை நழுவித்தப்பியோடுகிற விடயமாகவே தமிழ் மக்கள் கருதுவார்கள்!

## சஜித்துடனான சந்திப்பில் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு



சஜித் கொடுக்கிற வாக்குறுதிகளை எங்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் சொல்ல வேண்டும். அதை வைத்து தான் நாங்கள் எங்கள் தீர்மானங்களை எடுப்போம் என்பதைத் திடமாகச் சொல்லி அனுப்பிருக்கிறோம், என்று தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வடக்கிற்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க் கட்சி தலைவருமான சஜித் பிரேமதாசா இலங்கை தமிழரசுக் கட்சியினரை நேற்றைய தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணத் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தகவல் வழங்குகையில்,

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் எங்களுடைய தமிழரசுக் கட்சியினருடன் பேச வேண்டுமென்று கோரியதன் அடிப்படையில் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் எங்களுடைய இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதிலே எங்களுடைய கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, சிரேஷ்ட உபதலைவர் சீ.வீ.கே.சிவஞானம், நிர்வாகச் செயலாளர் குலநாயகம் மற்றும் நானும் கலந்துகொண்டு தமிழ் மக்களுடைய எதிர்பார்ப்பு சம்பந்தமாக எடுத்துச் சொன்னோம்.

அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக எங்களுக்கு இருக்கிற ஏமாற்றங்கள், நாங்கள் போதாது என்று சொல்லுகிற 13 ஆம் திருத்தத்தைக் கூட இப்பொழுது இன்னமும் மோசமான நிலைக்கு கடந்த கால அரசாங்கங்கள் கொண்டு வந்து விட்டிருக்கின்றன.

கொடுத்ததையும் மீளப் பெறுகிற ஒரு சூழ்ச்சியின் காரணமாக இப்பொழுது அது மிகவும் நலிவடைந்ததாக காணப்படுகிறது. ஆகவே 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்துவேன், என்று சொல்லுவதில் கூட இன்றைக்கு அர்த்தம் இல்லாமல் இருக்கிறது என்பதைத் தெளிவாக எடுத்துச் சொன்னோம்.

இதில் விசேடமாக வடக்கு மாகாண அவைத் தலைவராக இருக்கின்ற சீ.வீ.கே.சிவஞானம், மாகாண சபை அனுபவங்களையும் மாகாண சபை நிறுவனங்களை முன்னெடுத்துச் செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலைமைகளையும் விபரமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

இவற்றுக்கெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் பதிலளிக்கும்போது, தன்னுடைய நோக்கு – முதலில் கிராமம் கட்டியெழுப்பபட வேண்டும் என்றும் அதன் பிறகு நகரம், பிரதேச செயலகம், மாவட்டம், மாகாணம் கட்டியெழுப்பப்பட்டு அதற்குப் பிறகுதான் நாடு கட்டியெழுப்பப்படும் என்று தன்னுடைய கோட்பாட்டைப் பற்றிச் சொன்னார்.

அடிமட்டத்திலே இருக்கிற நிறுவனங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்பது தன்னுடைய கோட்பாடு என்றும் சொல்லியிருந்தார்.

இதில் விசேசமாக, நிதிப் பகிர்வு என்ற விடயத்தையும் கூறியிருந்தார். அதாவது, அதிகாரப் பகிர்வைக் கொடுத்துவிட்டு, நிதிப் பகிர்வைச் செய்யாவிட்டால் அந்த அதிகாரப் பகிர்விலே எந்தவித பிரயோசனமும் இருக்காது என்றும் ஆகவே அது சம்பந்தமாக தாங்கள் விசேட கவனம் எடுப்பதாகவும் சொன்னார்.

நாட்டில் வாழுகிற மக்கள் மத்தியிலே, அதாவது வெவ்வேறு இனங்கள் மத்தியிலே இருக்கிற பரஸ்பர நம்பிக்கையீனத்தை நாங்கள் சிறிது சிறிதாக இல்லாதொழிக்க வேண்டும். சேர்ந்து செயற்பட வேண்டும் என்கின்ற கருத்தையும் குறிப்பிட்டிருந்தார்.

இதில் நாங்கள் அவருக்கு சொல்லியிருக்கிற விடயம் என்னவெனில் இந்த நாடு நோக்கி அவர் சொல்லுகிற கருத்தியல்கள் நல்லவை. அவற்றை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் எங்களது தமிழ் மக்களின் அடையாளங்கள் பேணப்பட வேண்டும். தமிழ் மக்களது தாயகத்திலே வடக்கு கிழக்கு இணைந்ததான ஒரு அலகிலே பூரண அதிகாரப் பகிர்வு அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்பதே எங்கள் மக்களுடைய எதிர்பார்ப்பு எனவும் கூறியிருந்தோம்.

அவர் சொல்லுகிற மற்ற விடயங்கள் எல்லாம் நல்லவை. வரவேற்கத்தக்கவை. ஆனால், எங்களுடைய மக்கள் தூர நோக்கோடு எதிர்பார்க்கின்ற அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசாமல், அதைக்குறித்து வாக்குறுதிகளைக் கொடுக்காமல், வேறு விடயங்களைச் சொல்லுவது – அதிகாரப் பகிர்வைப் பற்றி சொல்லுவதிலேயிருந்து தப்பியோடுகிற விடயமாக எங்களுடைய மக்கள் கருதுவார்கள் என்பதை அவருக்குத் தெளிவாக நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

ஆகையினாலே மற்ற எல்லா நல்ல விடயங்களையும் பற்றிச் சொல்லுகிறபோது அதிகாரப் பகிர்வு சம்பந்தமான அவருடைய நிலைப்பாட்டை தெட்டத் தெளிவாக எங்களுடைய மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் விபரமாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதையும் சொல்லியிருக்கிறோம்.

இதற்கு அவர் தன்னுடைய தேர்தல் அறிக்கையில் அவை அனைத்தும் வருமென்றும் இந்தவிடயங்கள் உள்ளடக்கப்பட்டு தேர்தல் அறிக்கையில் முன்கூட்டியே வருமென்றும் சொல்லியிருக்கிறார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலே, அவர் தன்னுடைய தேர்தல் அறிக்கையில் சொன்ன விடயங்களை வைத்துத்தான் அவருக்கு நாங்கள் அதரவளிக்கும் தீர்மானங்களை எடுத்திருந்தோம்.

அதனை அவருக்கு இப்போது மீளவும் ஞாபகமூட்டினோம். அப்படி நாங்கள் ஒரு தீர்மானத்தை எடுத்த பின்னர் பெருவாரியாக வாக்களித்திருந்தார்கள்.

ஆகையினால் அவர் கொடுக்கிற வாக்குறுதிகளை எங்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் சொல்ல வேண்டும். அதை வைத்து தான் நாங்கள் எங்கள் தீர்மானங்களை எடுப்போம் என்பதை திடமாக சொல்லி அனுப்பிருக்கிறோம்.

நாளையதினம் ஜேவிபியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க எங்களை வந்து சந்திக்க இருக்கிறார். இதில் ஒரு விடயத்தை நான் தெளிவுபடுத்த வேண்டும்.

அதாவது ஜேவிபியினருடனான சந்திப்பு முற்கூட்டியே ஒழுங்கு செய்யப்பட்ட சந்திப்பாகும். அதேநேரம் சஜித் பிரேமதாசாவுடனான சந்திப்பு என்பது அதற்குப் பிறகு ஒழுங்கு செய்யப்பட்ட சந்திப்பாகும். ஆனால் இது முதல் நடக்கிறது. அது பிறகு நடக்கவுள்ளது – என விளக்கினார்.

இதன்போது ஆதரவு வழங்குமாறு வெளிப்படையாக சஜித் பிரேமதாசா உங்களிடம் கோரிக்கை விடுத்தாரா? என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில்,

உங்கள் ஆதரவு வேண்டுமென்று வெளிப்படையாக அவர் சொல்லவில்லை. ஆனால், அவர் எங்களை வந்து சந்தித்ததும், நடத்திய பேச்சுவார்த்தைகளும் அப்படியானதாகத்தான் இருந்தது, என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார். (O1)




## பருத்தித்துறை - துன்னாலையில்

# சட்டவிரோத கொல்களத்தை முற்றுகையிட்டு பசு மாடுகளை மீட்ட சாவகச்சேரிப் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். பருத்தித்துறை – துன்னாலைப் பகுதியில் நீண்ட காலமாக இயங்கி வந்த சட்டவிரோத கொல்களத்தை முற்றுகையிட்ட சாவகச்சேரிப் பொலிஸார், இறைச்சியாக்கப்படவிருந்த கன்றுத்தாச்சி மாடு உட்பட மூன்று பசு மாடுகளை நேற்று காலை வேளையில் உயிருடன் மீட்டுள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் பிரதேசத்தில் அண்மையில் வளர்ப்பு மாடுகள் திருடப்பட்டதாக பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் நீண்ட தேடுதலுக்கு மத்தியில் பொலிஸார் மேற்படி சட்டவிரோத கொல்களத்தை கண்டுபிடித்துள்ளனர்.

இதன்போது சாவகச்சேரி – மட்டுவில் கிராமத்தில் திருடப்பட்ட ஒரு மாட்டைப் பொலிஸார் மீட்டதுடன், ஏனைய இரண்டு மாடுகள் அடையாளம் காணப்படாத நிலையில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் வைத்து பராமராக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, மட்டுவில் கிராமத்தில் திருடப்பட்ட ஏனைய மாடுகள் இறைச்சியாக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சுற்றிவளைப்பின்போது மூன்று பசு மாடுகள் மீட்கப்பட்டதுடன் பசு மாடுகளைக் கடத்தப் பயன்படுத்தப்பட்ட வாகனம் ஒன்றுடன் பிரதான சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (O5)

# பொலிஸாரின் தொழில்சார் நன்மதிப்பினை .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீங்களும் லிப்டன் சுற்றுவட்டத்தில், கோட்டை புகையிரத முன்னிலையில் சந்தித்திருப்போம். அன்று எங்கள் கையில் போராட்டக் கோஷப்பலகை. உங்களுடைய கையில் சிலவேளை குண்டாந்தடிகள், கண்ணீர்ப்புகை இருந்திருக்கும். அது உங்களின் கடமை.

இன்று நாங்கள் ஒன்று சேர்ந்திருப்பது அந்தக் கடமையை விஞ்சிச் சென்ற பொறுப்பிற்காகவே! எம்மெதிரில் இருக்கின்ற இந்த நாட்டை மாற்றியமைக்க வேண்டுமென்ற திடசங்கற்பத்துடனேயே! உங்களைச் சந்தித்தது பாரிய தெம்பையும் நம்பிக்கையையும் தருகின்றது.

ரவி செனெவிரத்ன அவர்களுக்கு ஆளுங்கட்சியிலிருந்து மாத்திரமல்ல எதிர்கட்சியிலிருந்தும் பாரிய அழுத்தம் வந்தது. ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி ஆகிய இரண்டு குழுக்களும் அவருக்கு சிலவேளைகளில் நட்புணர்வுடனும் மற்றுமொரு வேளையில் மன்றாடுகின்ற தன்மையிலும் மேலும் சில நேரத்தில் அச்சுறுத்தல் விடுத்தும் இந்த மேடையில் ஏறவேண்டாமென கூறியிருக்கின்றனர்.

அது மாத்திரமல்ல. ஏற்கெனவே அவர் பற்றிய ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த மேடையிலிருந்துகொண்டு உங்களுடைய கீழ்த்தரமான வேலையை நிறுத்திக் கொள்ளுமாறு நான் சாகல ரத்நாயக்காவிற்கு கூறுகிறேன். எந்தவொரு பிரஜைக்கும் இந்த நாட்டில் தான் விரும்பிய அரசியல் இயக்கத்துடன் கூட்டுச்சேர்ந்து ஜனநாயக ரீதியாக செயற்படுவதற்கான புனிதமான உரிமை இருக்கின்றது. அவை எவற்றிற்குமே சாகலவின் அல்லது சஜித்தின் விருப்பமோ வெறுப்போ அவசியமில்லை.

ரவி செனெவிரத்ன எமது நாட்டின் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு பொறுப்பாக பணியாற்றிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராவார். ஷானி அபேசேகர குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளராவார். எனவே அந்த இரண்டு கட்சியினதும் வரலாற்றினை அவர்கள் நன்றாக அறிவார்கள். இந்த அச்சுறுத்தலின் பின்னால் இருப்பது அதுதான். அத்தகைய எந்த விதமான அச்சுறுத்தலுக்கும் பயப்படாமல் ஒடி ஒளிந்திடாமல் அவர்கள் இந்த மேடைக்கு வந்திருக்கிறார்கள்.

இந்த நாட்டு மக்களை விளித்து, அவர்கள் கொண்டுள்ள அனுபவங்களிலிருந்து எமது நாட்டின் சட்டத்தின் ஆட்சிக்கு என்ன நேர்ந்துள்ளதென அவர்கள் பொதுமக்களுக்கு எடுத்தியம்பி உள்ளார்கள். அவர்கள் துணிச்சல் மிக்கவர்கள். கூறுவது மாத்திரமன்றி இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்கு முனைப்பாக செயலாற்றுவதாகவும் சபதம் செய்திருக்கிறார்கள்.

பலர் எம்மிடம் கேட்கிறார்கள் உங்களுடைய அரசாங்கமொன்று வந்தால் யார் அதைச் செய்வார்கள்? என்று. எங்களுடைய ஆட்சியில் இந்த பொலிஸ் திணைக்களத்தின் சட்டத்திற்கு மதிப்பளித்து பணியாற்றிய சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் அனுபவங்கள், ஆலோசனைகள், இடையீடுகள் மூலமாகவே சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்படும் என நான் கூறுகிறேன்.

இந்த நாட்டுக்கு, எமது பிரஜைகளுக்கு ஏற்பட்டுள்ள பாதக விளைவுகளை நாம் அனைவரும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நீண்ட வரலாற்றுக்குச் செல்லாமல் கடந்த இரண்டு மூன்று வருடங்களைத் திரும்பிப்பார்த்தால் நாட்டுக்கும் பிரஜைகளுக்கும் என்ன நேர்ந்துள்ளது என்பது தெளிவாகும்.

கடனை மீளச்செலுத்தமுடியாமல் வங்குரோத்து நிலையடைந்த ஒரு நாடு, வைத்தியசாலைக்கு மருந்து மாத்திரைகளை கொடுக்கமுடியாமல்போன ஒரு நாடு!

எம் எதிரில் இருப்பது பிள்ளைகளுக்கு முறையான கல்வியைப் பெற்றுக்கொடுக்க முடியாமல்போன, வருமானம் பெற்றுத்தருகின்ற தொழிலொன்றைப் புரிய முடியாமல் போன, குற்றச்செயல் புரிபவர்களினதும் ஊழல் பேர்வழிகளினதும் பிடிக்குள் அகப்பட்ட ஒரு நாடு. இதன் பாதக விளைவினை ஒட்டுமொத்த சமூகமுமே அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமையை மாற்றியமைத்திட வேண்டும்.

இதனை மாற்றியமைக்க வேண்டுமானால் ஏனைய எல்லா விதமான மறுசீரமைப்புகளையும் போன்றே சட்டத்தின் ஆட்சி நிலவுகின்ற ஒரு நாடாக இலங்கையை மாற்றியமைக்க வேண்டியது முக்கியமானதாகும்.

எமது நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் சட்டத்தின் முன்னிலையில் தனக்கு நேர்ந்த அநீதி பற்றிய மனக்குறையை முன்வைப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படல் வேண்டும். நாங்கள் சட்டத்தின் முன் சமமானவர்களா? இல்லை. அதிகாரம், பணம் படைத்தவர்களுக்கு ஒரு விதமான சட்டம்.

பொலிஸ் திணைக்களம், சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களம், நீதிமன்ற முறைமை என்பவற்றை ஏளனம் செய்த தலைவர்கள்தான் இங்கே இருக்கிறார்கள்.

சுற்றுலா வீசா மூலமாக இலங்கைக்கு வந்திருப்பதை டயனா அறிந்திருந்தார். அந்த வீசா காலம் தீர்ந்துவிட்டதென அவர் அறிந்திருந்தும் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்து ராஜாங்க அமைச்சராக செயலாற்றினார். பிரஜாவுரிமை இல்லாத அவருக்கு அவருடைய அரசியல் அதிகாரத்திற்கிணங்க சட்டம் அமுலாக்கப்படமாட்டாது என்பது தெரியும்.

அந்த அனுமதிப்பத்திரமின்றி சைக்கிள் ஓட்டுவதற்கு பயப்படுகின்ற பிரஜைகள் இருக்கின்ற ஒரு நாட்டில், பிரஜாவுரிமையின்றி நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்து அவர் அமைச்சர் பதவியை வகிக்கிறார். டயனாவுக்கு பிரஜாவுரிமை கிடையாது என்பதை அடுத்ததாக அறிந்தவர் ரணில் ஆவார். அப்படிப்பட்ட ஒரு நாட்டுக்கு முன்னோக்கி நகரமுடியாது.

சட்டத்தின் ஆட்சியை முறைப்படி பாதுகாக்கின்ற ஒரு நாடு எமக்குத் தேவை. தனிப்பட்டமுறையில் என்னையோ, எங்கள் இயக்கத்தையோ பாதுகாப்பதற்காக – குற்றச் செயல் புரிபவர்கள், ஊழல் பேர்வழிகள், பாதாள உலக கோஷ்டியினர், நிதிசார் குற்றச்செயல் புரிந்தவர்கள் அல்லது கொலைக்காரர்கள் எமக்குத் தேவையில்லை. பொலிஸ் திணைக்களத்திற்கு சட்டங்கள் மூலமாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதாதென்றால் அதற்கான வசதிகளை வழங்கி சட்டத்தின் ஆட்சியை முறைப்படி பாதுகாப்போம் என நாங்கள் உத்தரவாதமளிக்கிறோம்.

பலர் பொலிஸ் மீது குற்றஞ்சாட்டுகிறார்கள்! எனினும் நூரி தோட்டத்தில், தோட்ட அத்தியட்சகரின் படுகொலை, ஹோகந்தர அறுவர் படுகொலை, நீதிபதி சரத் அம்பேபிட்டிய படுகொலை போன்ற சர்ச்சைக்குரிய கொலைகள் சம்பந்தமாக பொலிஸார் முறைப்படி செயலாற்றி நீதி மன்றம் ஊடாக குற்றச்செயல் புரிந்தவர்களுக்கு தண்டனை வழங்கினார்கள்.

எனினும் லசந்த படுகொலை, எக்னெலிகொட கடத்தல் பற்றிய விசாரணைகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றிய விசாரணைகள், கீத்நொயார் தாக்கப்பட்டமை பற்றிய விசாரணைகள், உபாலி தென்னகோன் மீது தாக்குதல் நடத்தியதாக மற்றும் போத்தல ஜயந்தவின் கை கால்களை முறித்தமை போன்ற விசாரணைகள் ஏன் முடியவில்லை? அந்தக் குற்றச்செயல்களின் மறைவில் அரசியல் தலையீடுகள் இருக்கின்றன.

எமது நாட்டின் பொலிஸ் திணைக்களத்திற்கு உத்தியோகபூர்வமாக வழங்கப்படுகின்ற பயிற்சிகள் மாத்திரமன்றி சிறப்பான மோப்பம் பிடிக்கின்ற திறமைகளும் இருக்கின்றன. எனினும் இவையனைத்தையும் அரசியல் தலையீடுகளே சீரழிக்கின்றன. ரவி செனெவிரத்ன அவர்கள் ஷானி அபேசேகர பற்றி வெளிப்படுத்திய கதையில் எம்மனைவரதும் இதயங்கள் ஒருகணம் நின்றுவிட்டன. கடமையைப் புரிந்தமைக்காக தண்டனை கிடைக்குமாயின் அந்த அரசியல் என்ன? ஷானி அபேசேகரவிற்கு நாங்கள் ஓர் உத்தரவாதம் அளிக்கிறோம். எமது ஆட்சியின்கீழ் நாங்கள் உங்களுக்கு நீதியை நிலைநாட்டுவோம். அநீதிகளுக்கும் பழிவாங்கல்களுக்கும் இலக்காகிய அவர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களுக்கு நீதியும் நியாயமும் கிடைக்கவேண்டும்.

சமூகத்தில் உறுதிநிலையை பாதுகாத்துக் கொள்ளும்போது பொலிஸ் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களங்களுக்கு பாரிய செயற்பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளது. பாரிய போராட்டங்களின் பெறுபேறாகவே மனித நாகரிகம் இற்றைவரை பயணித்துள்ளது. பழங்குடித் தலைவரிடம் இருந்த சட்டங்களை ஆக்குகின்ற நிறைவேற்று அதிகாரம் மக்களால் நியமிக்கப்படுகின்ற நிறைவேற்றுத்துறைக்கு கையளிக்கப்படுகின்றது. பழங் குடித் தலைவரிடம் இருந்த தண்டனை வழங்குகின்ற அதிகாரம் பொலிஸ் திணைக்களம், சட்டத்துறை தலைமை அதிபதித் திணைக்களம் மற்றும் நீதிமன்றத் தொகுதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

எனினும், எமது நாட்டில் நாடாளுமன்றம் மீண்டும் ஜனாதிபதியின் சமிக்ஞை விளக்குத் தூணாக மாறியுள்ளது. நீதி நிருவாகத்திற்காக இருக்கின்ற நிறுவனங்கள் படிப்படியாக அவரது பிடிக்குள் அகப்படுத்தப்பட்டு வருகின்றன. தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் இந்த நிறுவனங்கள் சுயாதீனமாக தமது அலுவல்களை மேற்கொண்டு வருவதற்கான வாய்ப்பு வழங்கப்படும். குறிப்பாக பொலிஸ் திணைக்களத்திற்கு முறையாக பதவியுயர்வு நடைமுறையொன்று அறிமுகஞ் செய்யப்படும். பொலிஸில் சேர்கின்றபோது, விவாகம் செய்யும்போது அத்துடன் இளைப்பாறுகின்ற வேளையிலும் கொன்ஸ்டபிள் பதவியிலேயே பெரும்பாலானோர் இருக்கின்ற நிலைமையை மாற்றியமைத்து, தொழிலை முன்னெடுத்துச் செல்கின்ற ஆற்றலுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தற்போது பொலிஸில் பெரும்பாலானோர் முக்கியஸ்தர்களின் பாதுகாப்பிற்காகவே ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். ஆனால், அவர்கள் பொதுமக்கள் பாதுகாப்பிற்காகவே ஈடுபடுத்தப்பட வேண்டும். 2000 ஆம் ஆண்டில் மக்கள் பிரதிநிதியாக நியமனம்பெற்ற நான் இதுவரை எனது பாதுகாப்பிற்காக பொலிஸ் உத்தியோகத்தரைப் பெற்றுக்கொள்ளவில்லை.

முக்கியஸ்தர்களின் பாதுகாப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்கள் படுகின்ற வேதனைகளை நாங்கள் அறிவோம். வரவு செலவு விவாதம் நடைபெறுகின்ற காலத்தில் தொடர்ச்சியாக 12 மணித்தியாலங்களுக்கு மேலாக கடமையில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இந்த நிலைமையை மாற்றியமைப்பதோடு பொலிஸ் சேவையில் ஈடுபட்டுள்ள அனைவரதும் உயிர்களைப் பாதுகாக்கவும் தேசிய மக்கள் சக்தி கடப்பாடு கொண்டுள்ளது.

24 வருடங்களாக நாடாளுமன்றத்தில் இருக்கின்ற நான் எமது நண்பரொருவர் ஹெல்மட் இன்றி பயணித்து அகப்பட்ட வேளையில்கூட பொலிஸ் நிலையத்திற்கு கோல் பண்ணியதில்லை. தவறாளிகளை விடுவிப்பதை தமது அரசியல் கருத்திட்டத்தின் ஒரு பகுதியாக மாற்றப்பட்டுள்ள கலாசாரத்தை நாங்கள் முற்றாகவே மாற்றியமைத்திடுவோம்.

அதேவேளையில் மற்றுமொரு விடயத்தையும் தெளிவாக கூறுகிறோம். குற்றச்செயல் புரிந்தவர்கள் மற்றும் ஊழல் பேர்வழிகள் பற்றிய விசாரணைகளின்போது மிகவும் நெருக்கமாக செயலாற்றுவோம். பொலிஸ் திணைக்களம் உள்ளிட்ட ஒவ்வொரு திணைக்களத்திற்கும் ஏற்புடையதாகும் வகையில் அரச பொறியமைப்பினை ஒருபோதுமே அரசியலுக்காக பயன்படுத்தமாட்டோம். பொலிஸின் உரிமையாளர் அரசியல்வாதியல்ல. பொலிஸின் ஒரு பகுதியினர் பயிற்சிகளைப் பெற்றிருந்தாலும் தமது சீருடைகள், நட்சத்திரங்களின் நன்மதிப்பும் மற்றும் தொழில்சார் மகிமையை பாதுகாக்கின்ற ஆட்சியொன்றை நாங்கள் நிலைநாட்டுவோம்.

கால ஓட்டத்தில் மண்ணில் புதையுண்டுபோக இடமளித்துள்ள குற்றச்செயல்களை தேசிய மக்கள் சக்தி மறந்துவிடமாட்டாது. 1994 இல் மேடையில் ஏறி சந்திரிக்கா குமாரதுங்க 17 வருடங்களாக திருடியுள்ள ஊழல் பேர்வழிகளை கோல்பேஸ் மைதானத்திற்கு கொண்டுவந்து தோலை உரிப்பதாக கூறினார். ஒரு ஏக்கர் தென்னங்காணியை ரூபா 2 வீதம் கொள்வனவு செய்த விஜேபால மெண்டிஸ் போன்றவர்களை தண்டிப்பதாகக் கூறினாலும் 7 வருடங்கள் கழிகின்றபோது அதே விஜேபால மெண்டிஸ் சந்திரிக்கா அரசாங்கத்தின் அமைச்சரவையில் ஓர் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

பிணைமுறி மோசடியின் சூத்திரதாரி, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் எனக் குறிப்பிடப்பட்ட ரணில் விக்கிரமசிங்க மொட்டுக்கட்சியின் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக ராஜபக்ஷக்களைப் போன்றே எமக்கெதிராகவும் பேனையை பாவித்த லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையை ரணில் விக்கிரமசிங்க மூடிமறைத்துள்ளார்.

தேர்தல் மேடைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட குற்றவியல் குற்றச்சாட்டுக்கள், ஊழல் குற்றச்சாட்டுகள் வெறும் மேடைப் பேச்சுக்களாக மாத்திரமே அமைந்துள்ளன. அத்துடன் அவர்கள் ஒருவரையொருவர் ஆரத்தழுவிக்கொள்ளும் கலாசாரத்தை அமுலாக்கி வருகிறார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின்கீழ் குற்றச்செயல்களும் ஊழல்களுமற்ற நாடாக இந்த நாட்டை மாற்றியமைக்கும் பொறுப்பினை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். நாட்டின் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்றே அடிப்படை விடயத்துறைகள் சம்பந்தமாக எம்மிடம் எவ்வளவுதான் திட்டங்கள் இருந்தாலும் சட்டம் சீரழிந்து, காடுமண்டிப்போயிருந்தால் அவற்றில் பயனில்லை.

எமது நாட்டின் சாதகமான எதிர்காலம் பற்றி எவருக்காவது நோக்கமொன்று இருப்பின் சட்டத்தின் ஆட்சி கட்டாயமாக நிலைநாட்டப்படல் வேண்டும். அதற்காக ஆற்றக்கூடிய பாரிய செயற்பொறுப்பு உங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. என்னதான் செய்தாலும் ஊழலை நிறுத்திவிட, குற்றச்செயல்களைத் தடுக்க முடியாதென ஒரு சிலர் கருத்தினை முன்வைத்து வருகிறார்கள். எனினும் அத்தகைய நிலைமைக்கு இழுத்துப்போட்ட அரசியலை மாற்றியமைப்பதன் மூலம் அந்தக் கருத்தினை முற்றாகவே நாங்கள் தோற்கடிப்போம். சில வேளைகளில் நட்புமிக்க வகையிலும், சிலவேளைகளில் தாபனம்சார் வடிவத்திலும் மற்றுமொரு தருணத்தில் அச்சுறுத்தல் வடிவத்திலும் பொலிஸ் மீது இடம்பெறுகின்ற அரசியல்வாதிகளின் இடையீட்டினை முற்றாகவே முடிவுறுத்துவோம்.

மேலும் ஒரு சிலர் – பொலிஸாரைத் திருத்தவே முடியாது!, எனக்கூறுகிறார்கள். எனினும் ஒவ்வோர் உத்தியோகத்தர்களுக்கும் தான் ஈடேற்றுகின்ற கருமத்தில் வெற்றியைப் பெற வேண்டுமென்ற மகத்தான உணர்வு இருக்கின்றது. குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஏதேனும் விசாரணை ஒப்படைக்கப்பட்டால் அதற்காக மல்லுக்கட்டிக்கொண்டு இறுதிவரை பயணிக்கின்ற உணர்வு பெரும்பாலான உத்தியோகதர்களிடம் இருக்கின்றது.

பிரஜையொருவரிடமிருந்து பொலிசுக்கு முறைப்பாடொன்று கிடைத்தவிடத்து அந்தப் பிரஜைக்கு நியாயத்தை வழங்கவேண்டுமென்ற உணர்வு பெரும்பாலானோரிடம் இருக்கின்றது. ஆனால், அந்த அனைத்து உணர்வுகளையும் மனிதநேய உணர்வுகளையும் தொழிற்சார் கௌரவத்தையும் ஐஸ் தண்ணீரில் அமிழ்த்திக் கொலை செய்திருக்கிறார்கள்.

(06ஆம் பக்கம் பார்க்க)

# விநாயகபுரம் பத்திரகாளி அம்பாளின் மஹா கும்பாபிசேக குடமுழுக்கு விழா





(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேசத்திலுள்ள விநாயகபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்மனுக்கு விசேட கும்பாபிசேகப் பெருவிழாவானது நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

பிரதம குரு சிவ ஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் கிரியைகளை நடாத்தி வைத்தார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை கிரியைகளுடன் ஆரம்பமாகி, பக்தர்களினால் எண்ணெய்க் காப்புச் சார்த்தும் நிகழ்வு இடம்பெற்று, மங்கள வாத்தியங்கள் முழங்க, மக்களின் அரோகரா கோஷங்களுடனும் மிக சிறப்பாக இடம்பெற்றது .

# மழையுடனான காலநிலையால் நாளாந்தம் 100 டெங்கு நோயாளர்கள் பதிவாகின்றனர்

தற்போது நிலவும் மழையுடனான காலநிலையுடன் நாளாந்தம் 100 டெங்கு நோயாளர்கள் பதிவாகி வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் இதுவரை நாட்டில் 25,619 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், டெங்கு நோயினால் 9 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

அதிக டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதுடன் அந்த எண்ணிக்கை 9,348 எனவும், வடமேற்கு, தெற்கு, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் டெங்கு பரவல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் மேற்படி கட்டுப்பாட்டு பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ரென-30)




# எஸ்.நஸீறுதீனின் "செழுஞ்சுடர்" சிறுகதைத் தொகுதி வெளியீடு

## 12 ஆம் திகதி மாளிகைக்காட்டில்




(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது சிஹாப்தீன் கலைக்கூடம் ஒழுங்கு செய்துள்ள எஸ்.நஸீறுதீனின் "செழுஞ்சுடர் " சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா எதிர்வரும் புதன் கிழமை 12 ஆம் திகதி மாலை மாளிகைக்காடு பாவா ரோயலி வரவேற்பு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய காங்கிரஸின் தேசியத் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

வைத்திய கலாநிதி எஸ்.நஜிமுதீன் தலைமையுரையினையும், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.அப் துல் றஸாக் நூல் அறிமுகவுரையையும், தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைப்பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் நயத்தலுரையையும், தென்கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் உதவிப் பதிவாளர் மன்சூர் ஏ.காதர் விமர்சன உரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

# திருமலையில் புதிய கிராம உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறி ஆரம்பமானது



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்ட புதிய கிராம உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறியானது நேற்று (10) திருகோணமலை மாவட்டச் செயலக புதிய ஒன்று கூடல் மண்டபத்தில், மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டு டிசம்பரில் கிராம உத்தியோகத்தர் 3 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல் தொடர்பாக இடம்பெற்ற போட்டிப் பரீட்சையின் எழுத்து மூலம் மற்றும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், ஆட்சேர்ப்பு செய்யும் புதிய கிராம உத்தியோகத்தர்களுக்கு, கிராம உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு ஏற்ப காலாண்டுப் பயிற்சிநெறியாக இப்பயிற்சி நெறி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

51 புதிய கிராம உத்தியோகத்தர்கள் இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், பிரதம கணக்காளர் ப.ஜெயபாஸ்கர், பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஏ.எல்.மஃறூப், கணக்காளர் ஏ.எல்.பிரசாத் விஜேசிங்க, நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர்.கே.எஸ்.குருகுலசூரிய, வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ. அனஸ் மற்றும் புதிய கிராம உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# சாய்ந்தமருதில் 'பெண் ஆயுள்' பெண்களுக்கான செயலமர்வு





(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராம மட்ட சமுதாய அடிப்படை அமைப்பின் பெண் உறுப்பினர்களுக்கான 'பெண் ஆயுள்' எனும் தலைப்பில் உணவு பழக்க வழக்கமும், தாய்,சேய் பராமரிப்பு மற்றும் குடும்ப நலத் திட்டம் தொடர்பான செயலமர்வு, சாய்ந்தமருது சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் அனுசரணையில் சாய்ந்தமருது பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நேற்று (10) திங்கட்கிழமை இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்க சமுதாய அடிப்படை அமைப்பு விடய அபிவிருத்தி உத் தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீனின் நெறிப்படுத்தலில் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ. மஜீத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வின் வளவாளராகவும் விசேட அதிதியாகவும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஜே.கே.எம்.அர்ஷத் காரியப்பர் கலந்து கொண்டார். நிகழ்வில் 'பெண் ஆயுள்' எனும் தலைப்பில் உணவுப் பழக்க வழக்கம் தாய், சேய் பராமரிப்பு, தொற்றா நோய், மற்றும் குடும்ப நலத்திட்டம் பற்றிய பூரண விளக்கத்தினை டொக்டர் அர்ஷத் காரியப்பர் வழங்கினார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் கே.எம்.கபீர், செயலாளர் எம்.ஜானுான், பொருளாளர் ஏ.ஆர்.ஷர்மிலா, சமுதாய அடிப்படை அமைப்பின் பெண் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## பொலிஸாரின் தொழில்சார் ......

(04ஆம் பக்கம் பார்க்க)

பொதுப்பிரஜைக்கு நியாயத்தை ஈடேற்றவேண்டுமென்ற உணர்வைப்போன்றே தமது தொழிலின் மகிமை, தொழில்சார் கௌரவத்தை மீண்டும் நிலைநாட்டுவோம். அநீதிக்கு இலக்காக்கி தம்மிடம் வருகின்ற ஒருவருக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுப் பதன் மூலம் ஏற்படுகின்ற உணர்வினை காசுக்கு வாங்க முடியாது. அந்த மனநிறைவினை மீண்டும் ஏற்படுத்துவோம்!

அரசாங்க நிறுவனங்களுக்கு பொதுவில் முன் வைக்கப்பட்டுள்ள அதிருப்திகரமான உணர்வினை மாற்றியமைக்கக்கூடிய மறுமலர்ச்சி யுகமொன்றை அனைத்து அரச நிறுவனங்களிலும் ஏற்படுத்துவோம். எமது சமூகத்தில் உருவாக்கவேண்டிய உளப்பாங்குகளையும் விருப்பு வெறுப்புகளையும் மாற்றியமைக்க வேண்டியுள்ளது. அத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தல் பற்றிய உணர்வு இல்லாவிட்டால் சிரமங்களை தாங்கிக்கொண்டு தொலைதூப் பிரதேசங்களிலிருந்து நீங்கள் இங்கு வந்திருக்கமாட்டீர்கள்.

எவ்வளவுதான் சிரமங்கள் இருந்தாலும் உங்களின் மனிதநேயப் பண்புகள் இந்த நாட்டு மக்களுக்கு சாதகமான வாழ்க்கையொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கான பங்காளிகளாக மாறுவதற்காக உங்களைத் தூண்டியுள்ளன. நீங்கள் இங்கு வரும்போது எம்மீது வைத்த நம்பிக்கைக்கு கடுகளவேனும் பங்கமேற்பட இடமளிக்கமாட்டோம் என்பதை உங்களுக்கு உறுதியாகக் கூறுகிறோம், என்று குறிப்பிட்டார். (04)

## நண்பருடன் இணைந்து மனைவியை குத்திக் கொலை செய்த கணவன் கைது

தலங்கமை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தலாஹேன பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பெண்ணின் கணவரும் அவரது நண்பரும் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தலங்கமை பொலிஸார் தெரிவித்தனர்.

தலங்கமை பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய பெண்ணே கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணுக்கும் அவரது கணவருக்கும் இடையில் கடந்த 6 ஆம் திகதி அன்று வாக்குவாதம் ஏற்பட்டுள்ள நிலையில் வாக்குவாதம் எல்லை மீறியதில் உயிரிழந்த பெண்ணின் கணவரும் அவரது நண்பரும் இணைந்து இவரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துவிட்டு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சந்தேகநபர்கள் இருவரையும் கைது செய்தனர்.

ஹிங்குரக்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய உயிரிழந்த பெண்ணின் கணவரும், கலேவெல பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய கணவரின் நண்பருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலங்கமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)






# கிளிநொச்சியில் UNDP வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டக் கலந்துரையாடல்



ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் (UNDP) கிளிநொச்சி மாவட்டதில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் இன்று நடைபெற்றது.

குறித்த கலந்தரையாடல் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் அவர்களின் தலைமையில், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் அனுசரணையில் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 1,250 பயனாளிகளுக்கு கோழி வளர்ப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

தற்போது குறித்த பயனாளிகளிலிருந்து 500 பயனாளிகளைத் தெரிவு செய்து அரை ஏக்கர் நிலப் பகுதியில் வீட்டுத்தோட்ட திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இதன்படி 450 பயனாளிகள் தமது சொந்த நிலங்களிலும், 50 பயனாளிகளை ஒன்று சேர்த்து கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பணிமனைக்கு உட்பட்ட நிலப் பகுதியில் பண்ணை முறையிலான பயிர்ச் செய்கையும் நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதன்போது குறித்த திட்டத்தின் பங்குதாரர்களுக்கு இத்திட்டத்தின் நடைமுறைகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் திட்டமிடல் பணிப்பாளர் கி.ஸ்ரீபாஸ்கரன், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் மஞ்சுளபண்டார மற்றும் செயற்றிட்ட முகாமையாளர் தமிக் சந்திரசேகர, கிளிநொச்சி மாவட்டப் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், பிரதேச செயலகங்களின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், கமநல சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# யானை தாக்கி இறந்தவருக்கு 10 இலட்சம் மரண இழப்பீடு

(எம் எப். நவாஸ்)

கடந்த வருடம் நவம்பர் 3 ஆம் திகதி யானை தாக்கியதில் அட்டாளைச் சேனை -15 ஆம் பிரிவைச் சேர்ந்த ஆசிரியர் அப்துல் ஜப்பார் நிலுவர் மரணமடைந்திருந்தார். அட்டாளைச் சேனை பிரதேச சம்பூநகர் விவசாயப் பாதையில் இந்தத் துயரச் சம்பவம் நடைபெற்றிருந்தது.

இந்த இழப்பிற்காக, அரசாங்க சுற்று நிருபத்திற்கு அமைய அரச நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவாக வனப் பரிபாலன திணைக்களத்தினால் பத்து இலட்சம் ரூபா வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

அதற்கமைய, அட்டாளைச்சேனை பிரதேச செயலக அனர்த்தப் பிரிவினால் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பங்கு பற்றலுடன் நிருவாக உத்தியோகத்தர் கே.வி.சலீமினால், அண்மையில் 10 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலையானது மரணித்தவவரின் மனைவியிடம் வழங்கி வைக்கப்பட்டதாக பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் சட்டதரணி ஏஜிஎம். அர்சாத் தெரிவித்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.06.2024 இல் வெளியிடப்பெற்றது.